பொதுவாக இல்லாமல் தனிப்பட்ட முறையிலே கேள்வி கேட்கப் பட்டிருக்கிறது. எனவே விவரங்கள் இல்லையென்று சொன்னாலும், சேரன் போக்குவரத்துக் கழகம்தான் முதன் முதலில் அதற்கான முழு முயற்சியை எடுத்தது என்பதை சொல்ல முடியும்.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இதுபோன்ற வீடு கட்டித் தரும் திட்டம் பல்லவன் போக்குவரத்துக் கழகம் புறநகர் பிரிவிற்கும் விரிவு படுத்த செயற்குறிப்பு அரசிடம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஒட்டுமொத்தமாக சொல்லிவிடுகிறேன். ஒன்பது போக்குவரத்துக் கழகங்களுக்கும் அதை விரிவுபடுத்துகிற திட்டம் இருக்கிறதென்று சொல்லி நடந்துமுடிந்த மானியத்திலே 27–ம் தேதி சொல்லியிருக்கிறேன் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

கன்னியாகுமரியில் விவேகானந்தர் நினைவுச் சின்னத்திற்கான படகு போக்குவரத்துப் பணி.

*வினா எண் 1017 திரு. சு. முத்துக்கிருஷ்ணன்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரியில் விவேகானந்தா ராக் மெமோரியல் கமிட்டி விவேகானந்தர் நினைவுச் சின்னத்திற்கு செல்லும் படகு போக்குவரத்தை நிறுத்துவதாக அறிவித்து உள்ளதா?

(ஆ) இந்தப் பிரச்சினையைத் தீர்க்க கமிட்டி அமைக்கப் பட்டதா?

(இ) படகு போக்குவரத்தைத் தொடர்ந்து நடத்த அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:

(அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ) கன்னியாகுமரி படகுத்துறையில் மணலைத் தூர் வாரி எடுப்பதில் உள்ளூர் மீனவர்களுக்கும் விவேகானந்தா கேந்திரத்தினருக்குமிடையே தகராறு இருந்து வருகிறது. இப்பிரச்சினையில் ஒரு நிரந்தரத் தீர்வைக் காண ஒரு தொழில் நுட்பக் குழு அமைக்கப்பட்டுள்ளது. அதன் அடுத்த அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

1981 மே 12]

திரு. சு. முத்துக்கிருஷ்ணன்: மாண்புமிகு தலைவரவர்களே, கன்னியாகுமரி விவேகானந்தா ராக் மெமோரியல் கமிட்டிக்கும், அங்கேயுள்ள மீனவர் சங்க பிரதிநிதிகளுக்குமிடையே ஏற்கனவே சிறிது காலமாக தகராறு இருந்து வருகிறது. இந்த தகராறை தீர்ப்பதற்காக எத்தனை முறை பேச்சு வார்த்தை நடத்தப் பட்டிருக்கிறது? அதைப்போல அரசு அந்த விவேகானந்தா ராக் மெமோரியல் கமிட்டிக்கு பேக் வாட்டர் வால் கட்டுவதற்கும், இன்னும் ஏனைய உதவிகளுக்காகவும் எவ்வளவு ரூபாய் செலவழிக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் இரண்டு முறை அங்கேயிருக்கிற விவேகானந்தா கேந்திர பொறுப்பாளர்களுடன், மீனவத் தலைவர்களோடு பேச்சு வார்த்தை நடத்தினேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், அவர்களை இரண்டு முறை சந்தித்து இருக்கிறார்கள். அதற்கு பின்னால் அதிகாரிகள் மட்டத்திலே இதற்கான பேச்சு வார்த்தைகள் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கின்றன. பேச்சு வார்த்தைகளில் சுமூகம் ஏற்படுகிற அளவிற்கு நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது. அதற்கு பணம் எவ்வளவு செலவழிக்கப் பட்டிருக்கிறது என்பதை கேட்டார்கள். நிரந்தரமாக சில வேலைகளைச் செய்ய இப்போது திட்டங்கள் போடப்பட்டிருக் கிறதேயொழிய செலவழிக்கப்படவில்லை. ஆனால் தற்காலிகமாக சில நடவடிக்கைகள் எடுப்பதற்கு ஒரு இலட்சத்து நாற்பது ஆயிரம் ரூபாய் நாம் செலவழித்திருக்கிறோம். இன்னும் கூட பல்வேறு திட்டங்களை அந்த குழு கொடுத்திருக்கிறது. இன்னும் ஒரு அறிக்கையை அவர்கள் கொடுப்பது பாக்கியாக இருக்கிறது. அது வந்தபிறகு முழுமையாக விவரங்களை சொல்ல முடியும்.

திரு. சு. முத்துக்கிருஷ்ணன்: மாண்புமிகு தலைவரவர்களே, விவேகானந்தா ராக் மெமோரியல் கமிட்டியின் சார்பில் இப்போது போக்குவரத்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அவர்கள் ஓட்டிக்கொண்டிருக்கிற அந்த இரண்டு படகுகளும் பழுது பட்டு விட்டதென்று சொல்லி படகு போக்குவரத்தை அவர்கள் நிறுத்தி விட்டதாகக் கூட அவர்கள் அறிவித்து இருந்தார்கள். பாராளு மன்றத்திலே ஒரு மத்திய அமைச்சர் ஒரு உறுப்பினருடைய கேள்விக்கு, படகு நாங்கள் இலவசமாக கொடுத்திருக் கிறோம் என்று சொன்னார்கள். ஆனால் அந்த படகு, அந்த படகு போக்குவரத்தை ஆரம்பித்த சமயத்திலே, சுமார் ஐந்து அல்லது ஆறு ஆண்டுகளுக்கு முன்பு கொடுக்கப்பட்ட படகு. அதுதான் இப்போது பழுதடைந்து இருக்கிறது. ஆகவே விவேகானந்தா ராக் மெமோரியல் கமிட்டி நம்முடைய அரசிடம் மறுபடியும் நல்ல முறையிலே படகு போக்குவரத்தை நடத்த வேண்டுமென்பதற்காக ஏதாவது உதவியை கேட்டிருக்கிறதா? இல்லையெனில் பழுது பட்ட படகுகளை சரி செய்து தருவதற்காக என்ன உதவியை அவர்கள் கேட்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல

அந்த கேந்திரத்தின் சார்பில் என்னென்ன உதவிகள் அரசிடம் கேட்கப்பட்டிருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு தலைவரவர்களே, அந்த படகு இப்போது கொஞ்சம் பழுது பட்டிருப்பது என்பது உண்மைதான். தமிழக அரசைப் பொறுத்தவரை அவர்களுக்கு என்னென்ன உதவிகள் வேண்டுமோ அதை செய்வதற்கு தயாராக இருக்கிறோம். காரணம் மாநிலத்தின் பல பகுதிகளிலிருந்தும், நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் மக்கள் அங்கே வந்து கொண்டிருக்கிற காரணத்தால் அதற்கான உதவிகளை செய்கிறோம் என்று நாங்கள் சொல்லியிருக்கிறோம். அவர்களுக்கென்று தனியாக ஒரு இடம் வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அதற்காகத்தான் இப்போது அரசு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது. அதற்கு பின்னால் இருக்கிற பிரச்சினைகள் எல்லாம் சாதாரண பிரச்சினைகள். நாம் ஒரு படகை அவர்களுக்குக் கொடுக்கலாம் என்று பார்த்த போது பொருத்தமான படகுகள் நம்மிடத்திலே இல்லையென்ற நிலைமை இருக்கிறது. அதற்காகதான் இந்த இடத்தை மாற்றியமைத்துக் கொடுத்தால் நிச்சயமாக இந்தப் பிரச்சினைகள் தானாகத் தீர்ந்துவிடும் என்று நம்புகிறோம்.

திரு. எல். இளையபெருமாள்: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது டெக்னிக்கல் குழு அமைக்கப்பட்டது என்று சொன்னார்கள். அங்கே அந்த மீனவ சமுதாய மக்களுக்கும் அதிகாரிகளுக்கும் மனக்கருத்து வேறுபாடு ஏற்பட்டு தகராறு இருந்தது. குழு அமைக்கப்பட்டதே, அந்த குழுவில் அறிக்கை மூலமாக இரண்டு தரப்பார்களுக்கும் சமரசம் செய்து வைக்க முடிவு செய்யப்பட்டதா? முதலமைச்சரைச் சந்தித்ததற்குப் பிறகு என்ன முடிவு செய்யப்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, முதல் அமைச்சர் அவர்களைச் சந்தித்த பின்புதான் அந்தக் குழு அமைக்கப்பட்டது. அந்தக் குழு சில அறிக்கைகளைக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் முதலமைச்சர் அவர்கள் ஒரு கோப்பிலே உத்தரவிட்டிருக்கிறார்கள், அறிக்கைகள் முழுமையாகக் கிடைக்கிற வரையில் இதை வெளியிடக் கூடாது., வெளிவந்தால் சில கருத்து வேறுபாடுகள் உருவாகும் என்று சொல்லியிருக்கிறார்கள், முழுமையான அறிக்கை கிடைத்ததற்குப் பிறகு தெரிந்து கொள்ளலாம். ஆனால் ஒரு நல்ல சுமூகமான சூழ்நிலையை உருவாக்குவதற்கான வாய்ப்பு எங்களுக்கு தென்படுகிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: விவேகானந்தா ராக் மெமோரியலில் அந்த ஊர் மக்களுக்கும் அந்த கமிட்டிக்கும் அடிக்கடி தகராறு ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது என்ற காரணத்தினால் அங்கே

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

நினைவாலயத்தைப் பார்ப்பதற்காக ஆயிரக்கணக்கான மக்கள் சென்று கொண்டிருக்கிறார்கள். எனவே அங்கே ஒரு பாலத்தை அமைத்துக் கொடுக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: இங்கே தன்னந்தனியாக செய்யமுடியுமா செய்யமுடியாதா என்றெல்லாம் சொல்ல முடியாது. அதற்காகத்தான் குழுவை அமைத்திருக்கிறோம். அந்தக் குழுவின் பரிந்துரை என்ன என்று பார்த்து நாம் கருத்துக்களைச் சொல்ல முடியும். அரசு, வேண்டுமானால் இங்கே தெரிவிக்கபட்ட மாண்புமிகு உறுப்பினர்களின் உணர்வுகளை அந்தக் குழுவுக்கு அனுப்பி வைக்கலாம்.

மாதவரம் பால் பண்ணை

* வினா எண் 1018—திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாதவரம் மில்க் காலனியில் உள்ள கறவை மாட்டுத் தொழுவங்களில் எத்தனை கறவை மாடுகள் தங்க வசதியுள்ளது?

(ஆ) அவற்றை எத்தனை உரிமைதாரர்கள் பயன்படுத்துகின்றனர்?

(இ) மொத்தம் அங்கு தற்போது உள்ள கறவை மாடுகளின் எண்ணிக்கை என்ன?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்:

(அ) 4000 கறவை மாடுகளும், 800 பால் வற்றிய கர்ப்பமுள்ள மாடுகளும் மாதவரம் அரசு பால் பண்ணையிலுள்ள 8 மாட்டுத் தொழுவங்களிலிருக்க வசதியுள்ளது.

(ஆ) தனியார்	14
பட்டதாரி உரிமைதாரர்	7
மொத்தம்	21

(இ) தற்போதுள்ள கறவை மாடுகளின் எண்ணிக்கை 241,

திரு. சோ. அழகர்சாமி: தலைவர் அவர்களே, மாதவரம் மில்க் காலனியிலே உள்ள தொழுவத்திலே 4,800 மாடுகள் இருப்பதற்கான எல்லா வசதிகளும் மற்றவைகளும் கட்டடங்களும் இருக்கின்றன. ஆனால் 241 கறவை மாடுகள்தான் இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். அதற்கு என்ன காரணம்? அந்தத் தொழுவத்திலே 4 ஆயிரம் கறவை மாடுகளைக் கட்டி பராமரிக்கக்கூடிய வகையிலே வருவதற்கு நிறைய விவசாயிகளோ அல்லது பால் உற்பத்தியாளர்களோ தயாராக இருந்தும் அவர்களுக்கு கடன் வசதிகள் போன்ற மற்ற வசதிகள்